# திருப்பிரிதி—ஜோஷீமடமல்ல

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி தொடங்குகையில் முதற் பதிகத்தை "நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்" என்று தலைக்கட்டி இரண்டாம் பதிகம் முதலாக திவ்ய தேசாநுபவத்தில் இழிந்து, முந்துற முன்னம் பிரிதி சென்றடை நெஞ்சே! என்று திருப்பிரிதிக்கு ஒரு பதிகம் பாடினார். இத்தலம் இமயத்திலுள்ளதாகவும் பாசுரந்தோறும் காட்டியருளினர். ஸ்ரீபதரிகாச்ரமத்திற்கு ஸமீபத்தில் ஜோஷிமட் என்றொருதலமுள்ளது; அதுதான் பிரிதியென்பது என்று சிலருடைய கொள்கையாயிருந்தது. அறுபது ஆண்டுகட்குமுன்பு திவ்யஸ்தல மஞ்ஜரி யென்றொரு புத்தகம் ஒரு பாகவதரால் வெளியிடப்பட்டிருந்தது. அதில்தான் பிரிதியாவது ஜோஷீமட் என்றிருக்கக்கண்டேன். அதில் அப்ரத்யய முண்டாக வழியில்லாமையால் ப்ரத்யய முண்டாயிற்று. அடியேன் மூன்றுவிசை ஸ்ரீபதரிகாச்ரம யாத்திரை செய்துவந்தேன். ஒரு பர்யாயத்தில் உபயவேத பாரங்கதர்களான எண்மரை உடனழைத்துக் கொண்டு சென்றிருந்தபடியால் வழி முழுவதும் வேதபாராயணமும் அருளிச்செயல் ஸேவையுமாக நிகழ்ந்தது. ஜோஷீமட் என்கிற தலத்தில் பெருமாளுக்குத் திருமஞ்சனம் செய்வித்து க்ஷீராந்நமமுது செய்வித்து 'வாலிமாவலத்தொருவனதுடல்கெட' என்கிற திருப்பிரிதிப்பதிகத்தையும் ஸேவித்தோம். அந்த யாத்திரையில் அந்வயித்தவர்களில் இப்போது உள்ளவர்கள்;— ஸ்ரீமதுபயவே ஸ்ரீபெரும்பூதூர் மணவாள (ஸாமி) திருவேங்கடாசாரியர். மாம்பள்ளம் தி. வி. பாஷ்யகாராசாரியர், திருநீர்மலை கோமடம் ஸ்ரீநிவாஸாசாரியர் நூஜிவீடு நடாதூர் சடகோபாசாரியர் ஆகியவர்கள். இது நிற்க;

ஸ்ரீமதுபயவே புத்தூர் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சந பத்ராதிப ஸ்வாமி வதரியாத்திரை செய்து வந்தபின் திருப்பிரிதி ஜோஸீமடமன்று என்பதை உபபத்திகளுடன் ஸாதிக்கக்கேட்டு அதில் நம்பிக்கையுங் கொண்டேன். அது நம்மவர்கள் ஸேவிக்கப் பெறாததும் ஸேவிக்க முடியாததுமான திவ்ய தேசம் என்றே நினைக்கிறேன். எந்த ஸ்தலத்தில் வாஸஞ்செய்பவர் 'இது பிரிதி' என்று வழங்குகிறார்களோ அதுதான் பிரிதியாகும். ப்ரீதி யென்னும் வடசொல் பிரிதியெனத் திரிந்தது என்பதாக அடியேன் அநுமானமாக எழுதிவைத்திருப்பதுண்டு.

பிறகு அதில் அடியேனுக்கே ஔசித்யம் தோன்றவில்லை. தமிழர்களும் திவ்யப்ரபந்தவித்துக்களுமானவர்களுக்கு அத்தலம் உறைவிடமாகத் தெரியவில்லை.

பெரியாழ்வாரொருவர் மட்டும் ×தங்கையை மூக்கும் தமையனைத் தலையும் என்கிற பதிகத்திலுல் கண்டமென்னுங் கடிநகரைப் பாடியுள்ளார். பதரிகாச்ரம மார்க்கத்தில் தேவப்ரயாகமென்கிற க்ஷேத்திரந்தான் அதுவென்று எல்லாரும் நிர்விவாதமாக ஸேவித்து வருகிறார்கள். அந்தப் பதிகத்தில் ''நலந்திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும் நாரணன் பாதத்துழாயும், கலந்திழிபுனலால் புகர்படுகங்கைக் கண்டமென்னுங் கடிநகரே'' என்கிற பாசுரம் நற்சாக்ஷியமளிக்கின்றது.

ஸ்ரீ காஞ்சீபுரியில் அட்டபுயகரத் தெம்பெருமானை மங்களாசாஸனம் பண்ணுகின்ற திருமங்கையாழ்வார் ''செந்தமிழ்பாடுவார்தாம் வணங்கும் தேவரிவர் கொல்'' என்றருளிச்செய்தார். திருமுக மண்டலத்தை ஸேவித்தவுடனே இவர் முதலாழ்வார்களின் மங்களாசாஸனம் பெற்றவராயிருக்கவேணுமென்று தோன்றியது போலும். அவ்வாறே கண்டமென்னுங் கடிநகர்ப் புருஷோத்தமன் திருமுகமண்டலத்தை ஸேவித்தவாறே ''இவர் ஆழ்வார் பாடல் பெற்றவராயிருக்கவேணும்'' என்று அடியேனுக்குத் தோன்றினதை அந்த தேவாலயத்தில் அதிகாரிகள் காப்பாற்றி வருகிற ''காதா''வில் பொறித்து வைத்திருக்கிறேன், ஐம்பது வருஷங்களுக்கு முன்.

இந்த விண்ணப்பத்தின் முடிவாவது அடியேனுடைய ஆராய்ச்சியில் பிரிதி என்பதை நிர்ணயிக்க முடியவில்லை என்பதே.

# திவ்யதேசத் திருநாமங்களின் மாறுபாடுகள்

**மலைநாட்டில்;—** திருவண்பரிசாரத்தைத் திருப்பதிசாரமென்பர்கள். திருவல்லவாழைத் திருவல்லாய் என்பர்கள். திருவாறன்விளையை ஆரம்முளை யென்பர்கள். பாண்டி நாட்டில் ஆழ்வார் திருநகரி நவதிருப்பதிகளில்— **தென்திருப்பேரெயில்''** என்கிற முழு நாமத்தை அறிந்தவர்கள் சிலரே; திவ்யப்ரபந்தப் பதிப்புகளில்

*வெள்ளைச் சுரிசங்கு பதிகத்தில் பாசுரந்தோறும் "தென்திருப்பேரை யில்" என்று அச்சிட்டிருக்கிறார்களே யொழிய, ஒரு பாசுரத்திலும் "பேரெயில்" என்றில்லை.

**வரகுணமங்கையை** நத்தம் என்றே பெரியாரும் வழங்கி வருகிறார்கள்; வரகுணமங்கையென்றால் எங்கிருக்கிறதென்கிறார்கள். சோழநாட்டில் திருநாங்கூர்ப்பதிகளில் **திருத்தேவனார்தொகை** யைக் கீழைச்சாலை யென்றே வழங்கி வருகிறார்கள் யாவரும்.

**திருக்குடந்தையைப்** பற்றி ஒரு முக்கியமான ஆராய்ச்சி. வடமொழியில் **கும்பகோணம்** என்பது இது. **கோண** மென்றால் மூக்கு; குடமூக்கில் கோயிலாக்கொண்டு என்றார் பூதத்தாழ்வாரொருவர் மட்டும். மற்றை யாழ்வாரொருவரும் **குடமூக்கு** என்னவுமில்லை, கும்பகோணமென்னவுமில்லை. " குடமூக்கிலே ப்ரவஹிக்கும்" என்பது ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தி, க்ஷேத்ரமாஹாத்ம்யத்தில் கும்பகோண மென்றே யுள்ளது. அத்திருநாமம் தமிழ் நூல்களிற் புகாதது என்னோ?

சோழ நாட்டில் தஞ்சையின் பரிஸரத்தில் கபிஸ்தலமென்கிற திவ்யதேசம் ப்ரஸித்தமாயுள்ளது நான்முகன் திருவந்தாதியில் (திருமழிசைப்பிரான்) "ஆற்றங்கரை கிடக்குங்கண்ணன்" என்றுள்ளதே யன்றி கபிஸ்தலமென்று ஒராழ்வார் திருவாக்கிலும் வெளிவரவில்லை. பிள்ளைப்பெருமாளியற்றிய நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியிலும் பெரியவாச்சான்பிள்ளையின் திருவந்தாதி வியாக்கியானத்திலுமுள்ளது. அவர்கள் ஸ்வதந்த்ரமாக அருளிச்செய்யார்கள்: அப்படிக்குடத்தான் ஸன்னிதியென்கிற திருப்பேர்நகரும் ஆற்றங்கரையிலுள்ளதன்றோ?

ஸ்ரீகாஞ்சீபுரியில் நீரகம் காரகம் கார்வானம் முதலான திவ்ய தேசங்கள் 70, 80 ஸம்வத்ஸரமாக திருவூரகமென்கிற உலகளந்த பெருமாள் ஸன்னிதியில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளார்கள் பேரேற்று பட்டர் ஸ்வாமியால். அதற்குமுன் இவர்களை ஸேவித்தவர்களில்லை யென்கிறார்கள். இப்போதும் அர்ச்சகர் சொல்லுவதைக் கொண்டே திருநாமத்தை யறியவேணும் இவ்வாறாக, திருப்பிரிதி எவ்விடத்தில் எங்ஙனம் வழங்கப் பட்டு வருகிறதோ?